


இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 351 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆடி 15 – வியாழக்கிழமை 31 ஜுலை 2025 – வெளியூர் 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 351: Thiruvalluvar Year - 2056 - Aadi 15 - Thursday 31 July 2025 - Dak 16 Pages ₹ 5.00


## முதல்வரின் கோரிக்கைக்கு செவிசாய்க்காமல் – தமிழ்நாட்டுக்கு ஒன்றிய பா.ஜ.க. அரசு தர மறுக்கும்

# ரூ.2,291 கோடி கல்வி நிதியை விடுவிக்கக் கோரிய வழக்கு!

## உச்சநீதி மன்றத்தில் நாளை விசாரணைக்கு வருகிறது!

**சென்னை, ஜூலை 31 -**

**ஒருங்கிணைந்த கல்வி திட்டத்தின் கீழ் தமிழகத்துக்கு வழங்க வேண்டிய ரூ.2,152 கோடி நிதியை 6 சதவீத வட்டியுடன் சேர்த்து குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் விடுவிக்க ஒன்றிய அரசுக்கு உத்தரவிடக் கோரி, தமிழக அரசு சார்பில் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கு உச்சநீதி மன்றத்தில் நாளை விசாரணைக்கு வருகிறது.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்பேரில், தமிழக அரசு சார்பில் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவில் கூறியிருப்பதாவது: –

ஒருங்கிணைந்த கல்வி (சமக்ர சிக்ஷா) திட்டம் என்பது பாலர் பள்ளி முதல் 12ம் வகுப்பு வரையிலான முழு வரம்பையும் உள்ளடக்கிய பள்ளிக் கல்விக்கான ஒருங்கிணைந்த திட்டம்.

இத்திட்டம் குழந்தைகளின் இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமை சட்டத்தை செயல்படுத்துதலையும், நிலையான, தரமான கல்வி வளர்ச்சியையும் இலக்காக கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒன்றிய அரசு 60 சதவீதமும், மாநில அரசு 40 சதவீதமும் தனது நிதி பங்களிப்பை இந்த திட்டத்துக்காக வழங்குகின்றன.



தமிழகத்தில் தேசிய கல்வி கொள்கை 2020 மற்றும் பி.எம். திட்டத்தை செயல்படுத்தாத காரணத்தால், சமக்ர சிக்ஷா அபியான் திட்டத்தின் கீழ் தமிழகத்துக்கு கடந்த ஆண்டு ஏப்ரல் முதல் வழங்க வேண்டிய ஒன்றிய அரசின் பங்களிப்பு தொகையான ரூ.2,152 கோடி நிதியை ஒன்றிய அரசு இதுவரை விடுவிக்காமல் நிறுத்தி வைத்துள்ளது.

இதுதொடர்பாக ஒன்றிய அரசை அணுகியபோது பி.எம். ஸ்ரீ திட்டம் மற்றும் புதிய கல்வி கொள்கையை தமிழ்நாட்டில் அமல்படுத்தினால் மட்டுமே இந்த நிதியை விடுவிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டது.

ஆனால், மும்மொழி கொள்கை போன்ற காரணங்களுக்காக புதிய கல்வி கொள்கையை தமிழக அரசு ஏற்றுக்கொள்ளவில்லை.

**மாநில சுயாட்சிக்கு எதிராக ஒன்றிய அரசு!**

சமக்ர சிக்ஷா திட்டத்தின்கீழ் நிதியை பெறுவதற்கான தமிழகத்தின் உரிமையை ஒன்றிய அரசு தடுத்து நிறுத்துவது என்பது கூட்டாட்சி – சுயாட்சித் தத்துவத்துக்கு எதிரானது மட்டுமின்றி அவமதிப்பதாகும்.

தேசிய கல்விக் கொள்கையை அமல்படுத்த கட்டாயப்படுத்துவது என்பது மாநில சுயாட்சி மற்றும் கட்டமைப்பையும், கல்வி தொடர்பான மாநில அரசின் சட்டங்களை தகர்க்கும் செயலாகும். தமிழகத்தில் தற்போது இருமொழி கொள்கை பின்பற்றப்பட்டு வரும் நிலையில், அதற்கு மாற்றாக மும்மொழி கொள்கையை தமிழக அரசு ஏற்கவில்லை. குறிப்பாக இந்தி, உருதுவை திணிக்கும் வகையில் இந்த மும்மொழிக் கொள்கை உள்ளது. எந்த மொழியையும் எவர் மீதும் கட்டாயப்படுத்தி திணிப்பது அரசியல் சாசனத்துக்கு எதிரானது.

தமிழ்நாடு ஏற்கெனவே கல்வியில் முன்னேறிய மாநிலமாக நாட்டுக்கே முன்னோடியாக திகழ்கிறது. தமிழ் தாய்மொழி அல்லாத பிற மாணவர்களுக்கு மற்ற மொழிகளில் படிக்க போதுமான திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. சமச்சீர் கல்வி திட்டம் மூலமாக தரமான சமமான கல்வி போதிக்கப் பட்டு வருகிறது. இதனால் மற்ற மாநிலங் களைவிட தமிழகத்தின் கல்வித்தரம் சிறப்பாக உயர்ந்துள்ளது.

இந்த நிலையில் நிதியுதவி என்ற போர்வையில் ஒன்றிய அரசு தனது கொள்கையை செயல்படுத்த வேண்டும் என தமிழகத்தை கட்டாயப்படுத்த முடியாது. ஒன்றிய அரசின் புதிய தேசிய கல்வி கொள்கையை தமிழ்நாட்டில் அமல்படுத்த வேண்டிய அவசியம் இல்லை.



இந்த சூழலில் சமக்ர சிக்ஷா திட்டத்தின்கீழ் தமிழகத்துக்கு வழங்க வேண்டிய ரூ.2,152 கோடியை ஒன்றிய அரசு நிறுத்தி வைத்துள்ளதால் தமிழ் நாட்டில் 43.94 லட்சம் மாணவர்கள், 2.21 லட்சம் ஆசிரியர்கள், 32,701 இதர பணியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, ரூ.2,152 கோடியை உச்ச நீதிமன்றம் நிர்ணயம் செய்யும் குறிப்பிட்ட கால வரையறைக்குள் 6 சதவீத வட்டியுடன் சேர்த்து ரூ.2,291 கோடியாக தமிழக அரசுக்கு வழங்க வேண்டும் என ஒன்றிய அரசுக்கு உத்தரவிட வேண்டும் என்று அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**நாளை விசாரணைக்கு வருகிறது!**

கடந்த நிதி ஆண்டுக்கான கல்வி நிதியான ரூ.2,151 கோடியை வட்டியோடு சேர்த்து வழங்க வேண்டும் என்று வலியுறுத்திய, தமிழ்நாடு அரசின் வழக்கு நாளை (1.8.2025) விசாரணைக்கு எடுத்து கொள்ளப்படும் என்று பட்டியலிடப்பட்டுள்ளது.

**ஒன்றிய அரசிடம் பலமுறை கோரிக்கை விடுத்த முதல்வர்!**

இந்த வழக்கு உச்சநீதிமன்றம் தலைமை நீதிபதிகள் பி.ஆர்.கவாய், வினோத் சந்திரன் அமர்வு முன்பு விசாரணைக்கு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டுக்கு வழங்க வேண்டிய கல்வி நிதியை பாரபட்சமின்றி விரைந்து வழங்கக்கோரி ஏற்கனவே முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு பலமுறை கோரிக்கை விடுத்துள்ளார். பிரதமர் மோடிக்கும் கடிதம் வழங்கி வலியுறுத்தியுள்ளார்.

மேலும் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஒன்றிய கல்வி அமைச்சரைச் சந்தித்து தமிழ்நாட்டுக்கு வர வேண்டிய கல்வி நிதியை தாமதமின்றி உடனே விடுவித்திடுமாறு வலியுறுத்தியும் எந்த பதிலும் இதுவரை வரவில்லை.

**பிரதமர் மோடியிடம் நேரில் வலியுறுத்தியும் பதில் இல்லை!**

சமீபத்திய பிரதமர் மோடி தமிழ்நாட்டில் பல நிகழ்ச்சிகளில் பங்கேற்க வந்திருந்த போது நிதியமைச்சர் தங்கம் தென்னரசு முதல்வர் அவர்கள் வழங்கிய பல கோரிக்கைகள் கொண்ட கடிதத்தை பிரதமர் மோடியிடம் நேரில் அளித்தார். அதில் கல்வி நிதியை உடனடியாக விடுவித்திடக் கோரியிருந்ததும் குறிப்பிட த்தக்கது.

இந்நிலையில் உச்சநீதிமன்றத்தில் கழக அரசு தொடர்ந்த வழக்கு நாளை (ஆகஸ்ட் 1 – வெள்ளிக்கிழமை) விசாரணைக்கு வரவிருப்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப் படுகிறது.

---

## ஊரக வளர்ச்சித்துறை சார்பில்

# ரூ.505 கோடி மதிப்பீட்டில் 100 உயர்மட்டப் பாலங்கள்!

## தமிழ்நாடு அரசு டெண்டர் கோரியது!

சென்னை, ஜூலை 31 -

ஊரக வளர்ச்சித் துறை சார்பில், 28 மாவட்டங்களில் உள்ள ஊரகப்பகுதிகளில் ரூபாய் 505 கோடியில் 100 உயர்மட்ட பாலங்கள் கட்ட தமிழ்நாடு அரசு டெண்டர் கோரியுள்ளது.

கடந்த மார்ச் மாதம் தமிழ்நாடு சட்டப்பேரவையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை மானிய கோரிக்கை மீதான விவாதத்தில் பதிலளித்து பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி, ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளில் உயர்மட்ட பாலங்கள் அமைக்கப்படும் என்ற அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார்.

அதில், "ஊரகப் பகுதிகளில் உள்ள விவசாயிகள் விளைப் பொருட்களை சந்தைப்படுத்தவும் குக்கிராமங்களிலிருந்து பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் மருத்துவமனைகள் போன்ற அத்தியாவசிய தேவைகளை அனைத்து பருவகாலங்களிலும் சென்றடைவதற்கு கிராமச் சாலைகளில் உயர்மட்ட பாலங்கள் கட்டப்பட்டு வருகிறது.

2025-26ம் ஆண்டில் ஊரகப் பகுதிகளில் உள்ள ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளில் ரூ.800 கோடி மதிப்பீட்டில் உயர்மட்ட பாலங்கள் அமைக்கப்படும்." இவ்வாறு தெரிவித்திருந்தார்.

**அரசாணை வெளியீடு!**

இந்த அறிவிப்பை செயல்படுத்தும் வகையில் தமிழக அரசு அரசாணை கடந்த 7ஆம் தேதி அன்று வெளியிட்டுள்ளது. அதன்படி உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்திற்கு வரப்பட்ட கோரிக்கைகளை பரிசீலனை செய்து முன்னுரிமை அடிப்படையில் 100 பாலங்கள் அமைக்க ரூ. 505 கோடி ஒதுக்கீடு செய்யப்படுவதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**டெண்டர் வெளியீடு!**

இந்நிலையில் உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்திற்கு வரப்பட்ட கோரிக்கைகள் பரிசீலனை செய்யப்பட்டது.

கோரிக்கை மனுக்களின் முன்னுரிமை அடிப்படையில் 100 பாலங்கள் அமைக்க 505 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து, 28 மாவட்டங்களில் உள்ள ஊரகப் பகுதிகளில் 100 உயர்மட்ட பாலங்கள் அமைப்பதற்காக தமிழ்நாடு அரசு டெண்டர் கோரியுள்ளது.

---

## வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்தத்திற்கு கண்டனம்!

# நாடாளுமன்ற வளாகத்தில் இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் ஆர்ப்பாட்டம்!

*புதுடெல்லி, ஜூலை 31 -*

இந்திய தேர்தல் ஆணையத்தின், வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தத்திற்கு எதிராக இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் டெல்லியில் உள்ள நாடாளுமன்ற வளாகத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பீகாரில், இந்திய தேர்தல் ஆணையம், வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் நடவடிக்கை மேற்கொண்டு, 65 லட்சம் வாக்காளர்களை நீக்கியுள்ளது.

இந்த நடவடிக்கைக்கு காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட இந்தியா கூட்டணிக் கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் டெல்லியில் உள்ள நாடாளுமன்ற வளாகத்தில், எஸ்.ஐ.ஆர். எனப்படும், வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



இந்த ஆர்ப்பாட்டத்தில் நாடாளுமன்ற காங்கிரஸ் குழுத்தலைவர் சோனியா காந்தி, காங்கிரஸ் எம்.பி. பிரியங்கா காந்தி உள்ளிட்டோர், வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தத்திற்கு எதிராக முழக்கமிட்டனர்.

மேலும், பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில், வெளிமாநில தொழிலாளர்கள் கைது செய்யப்படுவதாக கூறியும் கண்டன முழக்கம் எழுப்பினர்.

மேலும் நாடாளுமன்ற வளாகத்தில், சத்தீஸ்கர் அரசைக் கண்டித்து காங்கிரஸ் எம்.பி. பிரியங்கா காந்தி தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு பிறகு செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் எம்.பி. பிரியங்கா காந்தி, ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியில், இது போன்ற நிகழ்வுகள் அதிகரித்து வருவதாகவும், சிறுபான்மையினருக்கு எதிராக நடத்தப்படும் வன்முறைகள் நிறுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தினார்.